பதுளை மாநகர சபை
பதுளை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூன் 17 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 24 ஆந் திகதியும் முதல்வருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து பதுளை மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 8,892,167 பெறுமதியான ஒரு நிகழத்தக்க பொறுப்பு மற்றும் 04 நிகழத்தக்க சொத்துக்கள் சம்மந்தமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்கின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 19,050,000 பெறுமதியான 07 மைதானங்கள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,050,000 என கணக்கிடப்பட்டிருந்தது. | சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்கின்றேன். |

**(ஆ) கணக்காய்வுக்கென சாட்சிகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 1,883,710 திருப்பியனுப்பப்பட்ட காசோலை சம்மந்தமாக மற்றும் அதற்கு தேவையான ஆதாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த தொகை அறவிடப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்கின்றேன். |

### 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | நிதி ஒழுங்கு விதி 571 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட 91 எண்ணிக்கையான பொது வைப்புக்கள் ரூபா 2,719,977 தொடர்பாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கேள்வி வைப்புத் தொகை இவ் வருடத்தில் சபைநிதிக்கு எடுப்பதற்கும் மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டி ஏற்பட்டால் சபை தீர்மானம் எடுத்து மீள வழங்க நடவடிக்கைகள் எடுக்கின்றேன். |
| (ஆ) | மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 இலக்க சுற்றுநிருபம் | 252 கடைகளில் இருந்து விலைமதிப்பீடு பெறுமதியில் ஆதனவரி அறவிடப்படாமல் 2002 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விலைமதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி அறவிடுவதனால் 2019 யூலை 31 ஆம் திகதிக்கு ரூபா 53,265,050 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | சுற்றுநிருப அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | புதிய விலைமதிப்பீட்டின் படி ஆதனவரி அறவிடுவதற்கு சபை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் தெரிவு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. மற்றும் மீளவும் சபைத் தீர்மானம் எடுத்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மாநகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 35,820,463 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,835,498 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 24,910,000 | 18,278,540 | 12,391,631 | 5,886,909 | 30,427,500 | 16,554,071 | 11,776,524 | 4,777,547 |
| (ii) | வாடகைகள் | 35,227,000 | 30,006,335 | 26,354,704 | 3,651,631 | 27,599,600 | 25,648,603 | 23,040,353 | 2,608,250 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 15,120,000 | 17,198,346 | 14,469,153 | 2,729,193 | 16,235,000 | 15,964,360 | 14,350,925 | 1,613,435 |
| (iv) | ஏனைய வருமானம் | 60,691,000 | 57,304,655 | 11,449,460 | 45,855,195 | 57,599,000 | 53,793,266 | 15,317,041 | 38,476,225 |
| | மொத்தம் | 135,948,000 | 122,787,876 | 64,664,948 | 58,122,928 | 131,861,100 | 111,960,300 | 64,484,843 | 47,475,457 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு அதிகமாக காணப்பட்ட நிலுவை ஆதனவரி ரூபா 22,784,193 மற்றும் நிலுவை ஏனைய வருமானம் ரூபா 76,335,732 அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும் | 2019 செப்தெம்பர் மாதம் வரையும் சொத்து தடுத்தல் மூலமாக ரூபா 4,943,696 ஆதனவரி அறவிடப்பட்டுள்ளது. 2019 ஆம் வருடத்தில் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் ரூபா 12,391,631 அறவிடப்பட்டுள்ளது. |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 20,792,750 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 31,327,478 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் அறவிடுவதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன. நிலுவை முத்திரைக் கட்டணத்தில் இருந்து ரூபா 2,051,500 கிடைக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் யூலையில் இருந்து திசெம்பர் வரையான காலத்திற்கு சரியான தகவல் இல்லாமலும் மற்றும் முறையின்றியும் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | சரியான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

#### (ஆ) நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் வருடம் தொடர்பாக அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தில் உள்ளடக்கிய 02 வேலைத்திட்டத்திற்கு பாதீட்டு ஏற்பாடு வழங்கப்பட்டிராமையால் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 2,176,592 ஆன 02 வேலைத்திட்டங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | அனுமதிக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் வருடாந்த பாதீட்டில் இருந்து கட்டுநிதி எடுக்க வேண்டும். | சபைத் தீர்மானப்படி எதிர்வரும் நடவடிக்கை செய்யப்படவில்லை. |

#### (இ) நிதியேற்பாடு வழங்கப்பட்டும் ஆரம்பிக்கப்பட்டிராத வேலைத்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் வருடம் தொடர்பாக அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டப்படி 17 அபிவிருத்தி வேலைகளுக்கான ரூபா 8,798,536 நிதியேற்பாடு வழங்கப்பட்டுள்ள போதும் மீளாய்வாண்டில் அந்த நிகழ்ச்சித் திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியேற்பாடு வழங்கப்பட்ட வேலைத்திட்டங்கள் சரியான நேரத்தில் முடிவுறுத்தப்பட வேண்டும். | சில வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சில வேலைத்திட்டங்கள் பிரதேச செயலகத்தினால் செய்யப்பட்டுள்ளன. |

**(ஈ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அடைவதற்கு தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் வருடம் தொடர்பான அபிவிருத்தி நிகழ்ச்சிப்படி 07 வகையான அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு ரூபா 1,953,912 செலவு செய்யப்பட்டுள்ள போதிலும் குறித்த வெளியீட்டு மட்டம் அடையப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் ஒப்பந்த வேலைகள் முடிக்கப்பட வேண்டும். | இவ் வேலைகளில் 2019 திசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது மற்றும் பொருட்கள் கிடைக்க தாமதமானதால் அவ்வேலைகள் செய்வதற்கு தாமதமாகியுள்ளது என பதிலளிக்கப்பட்டுள்ளது. |

**(உ) சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1980 இலக்கம் 47 சுற்றாடல் சட்டம் மற்றும் 1988 இலக்கம் 56 மற்றும் 2000 இலக்கம் 53 திருத்தச்சட்டத்தின் 23 ஆம் பந்தியின் பிரகாரம் மாடு கொல்லும் இடத்திற்காக சுற்றாடல் அனுமதி எடுக்க வேண்டியிருந்த போதிலும் கிறீன் லேன் றைவ், பதுல்பிட்டிய, பதுளை குறித்த இடத்தில் உள்ள மாடு கொள்ளும் இடத்துக்கு அனுமதி எடுக்கப்படவில்லை. மேலும் அவ்விடத்தில் சரியான முறையில் கழிவு நீர் போகாமையால் மத்திய சுற்றாடல் அதிகார சபையால் சபைக்கு எதிராக இது சம்மந்தமான வழக்கு போடப்பட்டுள்ளது. | குறித்த சுற்றாடல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது மத்திய சுற்றாடல் அதிகார சபையால் நீதிமந்ற வழக்கிடப்பட்டுள்ளது. அந்த வழக்கு மாடு கொல்லும் இடத்தை மூடுவதற்கு கட்டளை இடப்படவில்லை. |

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுக்கொள்ளும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும் | சுகாதார வசதிகள் இல்லாத மக்களுக்கான அவ் வசதிகள் சேவைகளை வழங்க ஏற்பாடு செய்கின்றோம். |

**3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சேனநாயக்க மைதானம், பொது மலசலகூடம் மற்றும் தெற்கு லேன் பொது மலசலகூடம் 2018 ஆம் ஆண்டில் வாடகைக்கு வழங்க மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் 30(இ) பந்திப் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் மாலை 6.00 மணிக்கு முதல் இவ்விரு மலசலகூடங்கள் சபைக்கு கையளிக்க வேண்டியிருந்த போதிலும் 2019 யூலை 17 ஆந் திகதி வரை கையளிக்கப்பட்டிருக்கவில்லை . | பெறுகை நடைமுறைப்படி வாடகைக்கு கொடுக்க வேண்டும். மற்றும் 2019 யூலை 17 ஆந் திகதி வரை நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | தற்போது இவ்விரு மலசலகூடங்கள் மீள எடுத்து கேள்வி கோரப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது. நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பதுளை நகரத்தில் நடாத்தப்படும் 02 திரையரங்கில் இருந்து 2012 ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டு வரைக்கும் அறவிடப்படவேண்டிய ரூபா 1,756,005 நிலுவை ஆதனவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | குறித்த பொழுதுபோக்கு வரி செலுத்தும் படி முகாமையாளருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ள போதும் இன்னும் தீர்க்கப்படவில்லை. மிகுதி விற்கப்படாத பற்றுச்சீட்டு புத்தகம் சபைக் கட்டுப்பாட்டில் எடுக்கப்பட்டமையால் நிலுவை வருமானம் கொடுப்பனவு செய்ய உடன்பட்டு தற்காலிக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதன் பின் 02 தவணைப்பணம் செலுத்தியுள்ளனர். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 49 ஊழியர்கள் அதிகமாகவும் 41 ஊழியர் வெற்றிடமாகவும் உள்ளது. | பதவிகள் மேலதிகம், வெற்றிடம் சம்மந்தமாக தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | அதிகமாக உள்ள பதவிக்கு அனுமதி எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் XXIV அத்தியாயம் 4 வது பந்திப் பிரகாரம் வேலையில் இருந்து விலகியோர், வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டோர், மாற்றம் ஆகிய 51 அலுவலர்களிடம் அறவீடு செய்யப்பட வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 1,860,214 நிலுவைக்கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். | கடன் மீதி அறவிட உரிய அலுவலர்களுக்கும் பிணையாளிகளுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. பதில் கிடைத்தவுடன் தேவையான நடவடிக்கைகள் எடுக்கின்றேன். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பதுளை தெற்கு லேனில் உள்ள10 கடைகளிற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை. மற்றும் 04 கடைகளிற்கு கைச்சாத்திட்ட ஒப்பந்தம் 14 வருடத்திற்கு முதல் முடிவடைந்துள்ளது. மேலும் 12 கடைகள் மூன்றாம் நபர்களுக்கு வாடகைக்கு வழங்கியமையால் ரூபா 2,342,400 வருமான இழப்பு ஏற்பட்டுள்ளன. | அறவிடப்பட வேண்டிய வருமானம் அறவிடப்பட வேண்டும். மற்றும் ஒப்பந்தப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடைகளிற்கு புது ஒப்பந்தம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |
| (ஆ) | விருந்தினர் விருந்தகத்திற்கு முன் உள்ள வாடகைக்கு கொடுக்கப்பட்ட மூன்று கடைகளின் மேல்மாடி கடை பெற்றோரால் கட்டப்பட்ட போதும் அந்த மேல்மாடி விலைமதிப்பீடு செய்து வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய வருமானம் அறவிடப்பட வேண்டும். | மீளவும் சபைத் தீர்மானப்படி அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கு யூலை தொடக்கம் திசெம்பர் வரை பெறுகைத் திட்டம் செய்யப்பட்டிருந்தது. | முழு வருடமும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அனுமதி எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் பெறுகைத் திட்டம் செய்யப்பட்டுள்ளது. |

## 4.2 கணக்காய்வு முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் 03 மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் காலாண்டிற்கு ஒன்றுப்படி நடாத்தப்பட வேண்டும். | 04 கூட்டங்களுக்கு அறிவித்தல் கொடுத்துள்ள போதிலும் அலுவலர்கள் வராமையால் சரியாக செய்ய முடியாமல் போனது. |